மாயா பஞ்சகம்



சுவாமி பிரபஞ்சநாதன்

ஸ்ரீ குருப்யோ நம:

மாயா பஞ்சகம்

(ஆதி சங்கரர் அருளியது)

தமிழாக்கம்

சுவாமி பிரபஞ்சநாதன்

மாயா பஞ்சகம்

மாயை ஒன்றே எங்கும் வியாபித்துள்ளது. இந்த மாயை இரு பெரும் சக்திகளாக வெளிப்படுகின்றது.

அவைகள், 1. ஆவரணம். 2. விக்ஷேபம் என்பனவாகும்.

இதில், ஆவரணம் என்பது மறைக்கும் சக்தி. விக்ஷேபம் என்பது தோன்றும் சக்தி எனப்படும். ஜீவர்களுக்கு தன் உண்மை சொரூபத்தை அறிய விடாமல் மறைக்கின்ற சக்தியை **'ஆவரணம்'** என்றும், இந்த உலகத்தை உண்மையாகத் தன் மீது ஏற்றி வைத்து பார்த்தல் **'விக்ஷேபம்'** என்றும் கூறப்படும்.

ஆவரணம் நம் உள்ளேயே அந்தர்யாமியாக இருக்கின்ற ஆத்மாவை அறிய விடாமல் மறைக்கின்றது. விக்ஷேபம் இல்லாத ஒன்றை இருப்பது போன்று காட்டி, அதை நம்ப வைத்து ஏமாற்றுகின்றது.

கண்களுக்கு காட்சியாகும் கானல் நீர் பார்ப்பதற்கு உண்மை போன்றே இருக்கும், அருகே சென்று விசாரித்துப் பார்த்தால், அங்கு நீர் இல்லை என்பது தெரிய வரும்.

அதுபோன்று, இந்த மாயா உலகம் பார்ப்பதற்கு உண்மை போன்று நம் கண்களுக்கு காட்சியாகின்றது. அதுவே, நம்மை நாம் சுயமாக விசாரித்துப் பார்க்கும் பொழுது, இது நம்முடைய எண்ணங்களில் வெளிப்பாடு என்பது புரிய வரும்.

இந்த நிலைக்கு காரணமான மாயைகளின் தன்மை பற்றி ஜகத்குரு ஆதி சங்கரபகவத்பாதாள் அவர்கள் தான் இயற்றிய ஐந்து ஸ்லோகங்களில் மிக அழகாக எடுத்துக் கூறுகின்றார்.

அதுவே **“மாயா பஞ்சகம்”** எனப்படும்.

இதன் மூலம் சமஸ்கிருத மொழியில் உள்ளது. இந்த ஸ்லோகங்களின் விளக்கங்களை எளிய தமிழ் மொழியில் அனைவரும் படித்து பயன் அடையும் பொருட்டு கொடுக்கப்படுகின்றது.

निरुपमनित्यनिरंशकेऽप्यखण्डे
मयि चिति सर्वविकल्पनादिशून्ये ।
घटयति जगदीशजीवभेदं
त्वघटितघटनापटीयसी माया ॥ (१)

நிருபமனித்யனிரம்ஶகேऽப்யக^{2}ண்டே^{3}
மயி சிதி ஸர்வவிகல்பனாதி^{3}ஶூன்யே ।
க^{4}டயதி ஜக^{3}தீ^{3}ஶஜீவபே^{4}த^{3}ம்
த்வக^{4}டிதக^{4}டனாபடீயஸீ மாயா ॥ (1)

<u>விளக்கம்:-</u>

நிகரற்றதும், சாஸ்வதமானதும், பிரிக்க முடியாததும், முழுமையானதும், சித் ஸ்வரூபமானதும், பேருணர்வானதும்

ஆகிய என்னில் பரம்பொருளையும், ஜீவனையும் வேறுபடுத்தி, வேற்றுமைகளை உண்டாக்குகின்ற இந்த மாயை நிகழ முடியாத எதையும் நிகழ்த்த வல்லது.

श्रुतिशतनिगमान्तशोधकान-
प्यहह धनादिनिदर्शनेन सद्यः ।
कलुषयति चतुष्पदाद्यभिन्ना-
नघटितघटनापटीयसी माया ॥ (२)

ஶ்ருதிஶதனிக^{3}மாந்தஶோத^{4}கான-
ப்யஹஹ த^{4}னாதி^{3}னித^{3}ர்ஶனேன ஸத்^{3}ய: ।
கலுஷயதி சதுஷ்பதா^{3}த்^{3}யபி^{4}ன்னா-
நக^{4}டிதக^{4}டனாபடீயஸீ மாயா ॥ (2)

விளக்கம்:-

வேதங்கள் பல கற்றும், செல்வங்கள் பல பெற்றும் வாழுகின்ற வல்லுனர்களைக் கூட அறிவு மயங்கச் செய்து, குழப்பத்தை உண்டாக்குகின்ற இந்த மாயை நிகழ முடியாத எதையும் நிகழ்த்த வல்லது.

सुखचिदखण्डविबोधमद्वितीयं
वियदनलादिविनिर्मिते नियोज्य ।
भ्रमयति भवसागरे नितान्तं
त्वघटितघटनापटीयसी माया ॥ (३)

ஸுக2சித3க2ண்ட3விபோ3த4மத்3விதீயம்
வியத3னலாதி3விநிர்மிதே நியோஜ்ய ।
ப்4ரமயதி ப4வஸாக3ரே நிதாந்தம்
த்வக4டிதக4டனாபடீயஸீ மாயா ॥ (3)

விளக்கம்:-

ஒரு பேச்சுக்கு கூட விளக்க முடியாத, பிளக்க முடியாத, இரண்டற்ற, நித்யானந்த, பேருணர்வான என்னை ஆகாயம், காற்று போன்றவற்றில் செலுத்தி, சம்சாரக் கடலில் தள்ளச் செய்கின்ற இந்த மாயை, நிகழ முடியாத எதையும் நிகழ்த்த வல்லது.

अपगतगुणवर्णजातिभेदे
सुखचिति विप्रविडाद्यहंकृतिं च ।
स्फुटयति सुतदारगेहमोहं
त्वघटितघटनापटीयसी माया ॥ (४)

அபக3தகு3ணவர்ணஜாதிபே4தே3
ஸுக2சிதி விப்ரவிடா3த்3யஹங்க்ரு’திம் ச ।
ஸ்பு2டயதி ஸுததா3ரகே3ஹமோஹம்
த்வக4டிதக4டனாபடீயஸீ மாயா ॥ (4)

விளக்கம்:-

ஆனந்தமான பேருணர்வாகிய என்னில், குணத்தினால், இது நல்லது, இது கெட்டது என்றும், நிறத்தினால், இவன் சிகப்பு, கறுப்பு என்றும், ஜாதியினால் நான் அந்தணன், நான் வைசியன் என்றும், பல அகங்கார உணர்ச்சிகளையும், மனைவி, மக்கள், வீடு என்ற மோக உணர்ச்சிகளையும் உண்டாக்கிய இந்த மாயை, நிகழ முடியாத எதையும் நிகழ்த்த வல்லது.

विधिहरिहरविभेदमप्यखण्डे
बत विरचय्य बुधानपि प्रकामम् ।
भ्रमयति हरिहरभेदभावा-
नघटितघटनापटीयसी माया ॥ (५)

விதி^{4}ஹரிஹரவிபே^{4}த^{3}மப்யக^{2}ண்டே^{3}
ப^{3}த விரசய்ய பு^{3}தா^{4}னபி ப்ரகாமம் ।
ப்^{4}ரமயதி ஹரிஹரபே^{4}த^{3}பா^{4}வா-
நக^{4}டிதக^{4}டனாபடீயஸீ மாயா ॥ (5)

<u>விளக்கம்:-</u>

முழுமையான சிதானந்த உணர்வான என்னிடம் ஹரி, ஹரன் என்று கடவுளர்களில் வேற்றுமைகளை உண்டாக்கி, எனக்கு வேறாக பிரிவினைகளை உண்டாக்கி, மிகப்பெரிய அறிஞர்களைக் கூட இந்த விசயத்தில் குழப்பி விடுகின்ற இந்த மாயை நிகழ முடியாத எதையும் நிகழ்த்த வல்லது.

ஓம் தத் சத்

மாயா பஞ்சகம்



சுவாமி பிரபஞ்சநாதன்